DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.101/2017** |
| Deposition of witness for | - P.W.4 |
| Name | - Sahayaraja |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.12.2021

முதல் விசாரணை:

நான் தற்போது மதுரை புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது எலெக்ட்ரிசியன் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 16.01.2016 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் ரியல் எஸ்டேட் தொடர்பாக புதுராம்நாட் ரோட்டிலுள்ள தெப்பக்குளம் ஏரியாவில் எதிரிக்கும், இறந்துபோன ரோஸிக்கும் அடிக்கடி குடும்பத்தில் சண்டை வரும். இறந்த ரோஸியின் நடத்தையில் சந்தேகப்பட்டு எதிரி சுத்தியலைக் கொண்டு அடித்தார், அதனால் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு ரோஸி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அன்று இரவு சுமார் 09.00 மணியளவில் காவல்துறையினர் என்னை விசாரித்தனர். நடந்த உண்மை தெரியுமா எனக் கேட்டனர், தெரியும் என நான் கூறினேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.2** அது சம்பவ இடத்தில் வைத்து தயார்

செய்யப்பட்டது அதில் எனது நண்பர் ஜான்பீட்டரும் கையொப்பம் செய்துள்ளார். இது சம்பந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை ( எதிரி தரப்பில்)**

நானும், ஜான்பீட்டரும் சேர்ந்துதான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறோம். அவரும் புதூரில்தான் வசித்து வருகிறார். ஜான்பீட்டரும் சொல்லிதான் சம்பவம் எல்லாம் தெரியுமா என்றால் ஆமாம். மதுரை புதுராம்நோட் பழைய மீனாட்சி நகருக்கும், புதூருக்கும் சுமார் 5, 6 கி.மீ தூரம் இருக்கும். நான் சம்பவத்தை பற்றி கேள்விப்படும்போது இரவு சுமார் 09.00 மணி இருக்கும். ஜான்பீட்டரும் என்னுடன்தான் இருந்தார், அவர் அப்பா பெயர் அய்நீஸ். இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்படும் போது நான் ராம்நாட் ரோட்டிலுள்ள சம்பவம் நடந்த வீட்டின் பக்கத்தில்தான் இருந்தேன். நான் என் வீட்டிலிருந்து கிளம்பு சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றேன். புதூரில் உள்ள என் வீட்டிலிருந்து நான் கிளம்புகையில் மாலை சுமார் 03.30 மணி இருக்கும். சம்பவ இடம்போய் சேரும்போது சுமார் 03.45 இருக்கும். நான் சம்பவ இடம் போகும்போது அங்கு போலீசார் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்து என்னிடம் வாக்குமூலம்பதிவு செய்து கொண்டார்கள். நான் அதில் கையொப்பம் செய்தேன். நான் அதில் ஒருமுறை கையொப்பம் செய்தததை தவிர வேறு எதிலும் நான் கையொப்பம் செய்யவில்லை. நான் என் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் நான் சொன்ன வாக்குமூலத்தில் எழுதப்பட்டிருந்தது அதில்தான் நான் கையொப்பம் செய்தேன். ஜான்பீட்டரிடமும் அதேபோல் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கினார்கள். ஜான்பீட்டர் வீடு என் வீட்டின் எதித்தாற்போல் உள்ளது. சம்பவத்தன்று நானும், ஜான்பீட்டரும் சேர்ந்துதான் ஜான்பீட்டரின் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற நேரம் குழந்தைசாமி அங்கிருந்தார். அவர் ஜான்பீட்டருக்கு சொந்தக்காரர், எனக்கு சொந்தக்காரர் இல்லை. நானும் கத்தோலிக்க கிறித்துவர்தான். நான் புதூர் கத்தோலிக்க திருச்சபையில் பங்காக இருக்கிறேன். ஜான்பீட்டர் கூப்பிட்டுதான் நான் அவர் வீட்டிற்கு போனேன். சம்பவத்தைப்பற்றி தெரிந்துதான் நான் ஜான்பீட்டரும் சம்பவ இடத்திற்கு போகவில்லை, எதேச்சையாகத்தான் போனோம். அங்கு போய்தான் ரோஸி இறந்துபோனது தெரியும். நாங்கள்

சம்பவ இடம் போகும்போது போலீசார் அந்த தெருவில் இருந்தவர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அந்த தெருவில் உள்ளவர்களிடம் போலீசார் கையெழுத்து வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. ஆர் டி ஒ விசாரணையின்போது நான் அங்கிருந்தேன். ஆர் டி ஒ என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார். அப்போது இரவு சுமார் 09.00 மணி இருக்கும். கடந்த 16.01.2016 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் ரியல் எஸ்டேட் தொடர்பாக புதுராம்நாட் ரோட்டிலுள்ள தெப்பக்குளம் ஏரியாவில் எதிரிக்கும், இறந்துபோன ரோஸிக்கும் அடிக்கடி குடும்பத்தில் சண்டை வரும். இறந்த ரோஸியின் நடத்தையில் சந்தேகப்பட்டு எதிரி சுத்தியலைக் கொண்டு அடித்தார், அதனால் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு ரோஸி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அன்று இரவு சுமார் 09.00 மணியளவில் காவல்துறையினர் என்னை விசாரித்தனர் என்று ஆர் டி ஒ விசாரணையிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சொன்னபடி எதுவும் நடக்கவில்லைஎன்றும், எந்த ஆவணத்திலும் நான் கையெழுத்து போடவில்லை என்றும், நான் இறந்த ரோஸிக்கு நெருங்கிய சொந்தம் என்றும், அதனால் ஆஸ்பத்திரிக்கு சென்றபோது போலீசார் சாட்சியம் வேண்டும் என்பதற்காக அ.சா.1-ன் வேண்டுகோளின்படி சாட்சியாக என்னையும், ஜான் பீட்டரையும் காவல்நிலையம் அழைத்துச் சென்று அங்கு வைத்து கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஅவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.